# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1607/13 - 2009 ජූනි 23 වැනි අඟහරුවාදා - 2009.06.23

*1607/13 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க , பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வ வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, 2006, யூலை 7 ஆந் தேதிய 1452/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் திருத்தப்பட்டவாறான (அட்டவணை மாற்றீடு செய்யப்பட்டது) 2007, ஒற்றோபர் 9 ஆந் தேதிய 1518/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1995, நவெம்பர் 7 ஆந் தேதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அத்தகைய அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் "சமூக அறிவியல் மற்றும் மானிடவியல் பீடம்" என்னும் விடத்திற்கும் அதற்கான II ஆம் நிரலில் காணப்படும் அதனுடைய நேரொத்த பதிவிற்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இக்கட்டளையைத் திருத்துகின்றேன்.

| "நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறைகள் |
|---|---|
| சமூக அறிவியல் மற்றும் மானிடவியல் பீடம் | 1. சமூகக் கற்கைகள் துறை.<br>2. மானிடவியல் துறை.<br>3. தொல்பொருளியல் மற்றும் மரபுரிமைசார் முகாமைத்துவத் துறை.". |

பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வ வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2009, யூன் 19.

7 - 235